தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர்கள் தேர்வுக் குழுமம்
TAMIL NADU FOREST UNIFORMED SERVICES RECRUITMENT COMMITTEE
8வது கீழ்தளம், எண்.01 ஜீனிஸ் சாலை, பனகல் மாளிகை,
சைதாப்பேட்டை, சென்னை-600 015.
8th Down Floor,No.01, Jeenis Road, Panagal Maaligai, Saidapet,
Chennai - 600 015.
Phone No. / தொலைபேசி எண்.044-2434 1251
Website : www.forests.tn.gov.in Email ID: tnfusrc.tnchn@nic.in

**வனக்காப்பாளர் மற்றும் ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர் பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்புதல்**

(விளம்பர எண். 2/2019, நாள்: 30.11.2019)

***

## வனக்காப்பாளர் மற்றும் ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர் பணியிடங்களுக்கான கேள்வி மற்றும் விடை சவால் செய்தல்

1. வனக்காப்பாளர் மற்றும் ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர் பதவிகளுக்குரிய இணையவழித் தேர்வு 08.03.2020ம் தேதி நடைபெற உள்ளது.

2. இணையவழித் தேர்வு எழுதவுள்ள விண்ணப்பதாரர்கள் www.forests.gov.in என்ற இணையதளம் மூலம் உள்நுழைந்து, வினாவாரியாக விண்ணப்பதாரர்களால் அளிக்கப்பட்ட பதில்களையும், கேள்விக்கான சரியான பதில்களையும் காணலாம். இதற்குரிய திரை இணையதளத்தில் வெளியிடப்பட உள்ளது. (தேதி பின்னர் அறிவிக்கப்படும்).

3. விண்ணப்பதாரர்கள் ஏதேனும் தவறைக் கண்டறியும் பட்சத்தில், விண்ணப்பதாரர்கள் www.forests.gov.in என்ற இணையதளம் மூலம் உள்நுழைந்து சவால் செய்யலாம். கேள்வி மற்றும் விடை சவால் செய்வதற்குரிய திரை இரண்டு நாட்களுக்கு மட்டுமே வழங்கப்படும். (தேதி பின்னர் அறிவிக்கப்படும்).

4. கேள்வி மற்றும் விடை சவாலை இணையவழி மூலம் மட்டுமே மேற்கொள்ள முடியும்.

5. விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு கேள்வி / விடைக்கான சவாலுக்கும் இணையவழி கட்டண நுழைவாயில் (online payment gateway) மூலம் ரூ.500/- (+அனுமதிக்கப்பட்ட சேவை வரி) செலுத்தி விண்ணப்பிக்கலாம்.

6. விண்ணப்பதாரர்களின் கேள்வி / விடை சவால் ஏற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில், மேலே குறிப்பிடப்பட்ட கேள்வி / விடை ஒன்றுக்கான ரூ.500/-னை இணையவழி முறையில் (online mode) மட்டுமே திருப்பி செலுத்தப்படும்.

7. விண்ணப்பதாரர்கள் முறையிடும் அனைத்து ஆட்சேபனைகள் / சவால்களை கருத்திற்கொண்டு தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர்கள் தேர்வுக் குழுமம் (TNFUSRC) இறுதி விடைகளை வெளியிடும் மற்றும் தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர்கள் தேர்வுக் குழுமத்தின் 2020 தேர்விற்கான இறுதி முடிவுகள் அறிவிக்கப்படும்.

8. தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர்கள் தேர்வுக் குழுமத்தால் இறுதி விடைகள் அறிவிக்கப்பட்ட பின்னர் எந்தவொரு சவால்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. விண்ணப்பதாரர்கள் பெற்ற மதிப்பெண்கள் (கேள்வி / விடை சவாலின் அடிப்படையில்) தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர்கள் தேர்வுக் குழுமத்தால் “மூல மதிப்பெண்களாக” கருதப்படும். தகவல் சிற்றேடு பத்தி 17 (a)-ன் படி நியாயமான மற்றும் கட்டாயமான இயல்பாக்கல் நடைமுறையினால் மதிப்பெண்கள் அதிகரிக்கலாம் / குறையலாம் / மதிப்பெண்கள் மாறாமல் இருக்கலாம்.

10. இயல்பாக்கல் நடைமுறைக்குப்பின் விண்ணப்பதாரர்களால் பெறும் மதிப்பெண் தான் **“இறுதி மதிப்பெண்“** ஆகும்.

11. இது தொடர்பாக தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர்கள் தேர்வுக் குழுமத்தின் முடிவே **இறுதியானதாகும்.**

**குறிப்பு**: விண்ணப்பதாரர்கள் கேள்வி மற்றும் விடை சவால் செய்வதற்கு www.forests.tn.gov.in இணையதளத்தில் விரைவில் வெளியிடப்பட உள்ள **”கேள்வி மற்றும் விடை சவால் - எதிர்ப்பார்க்கப்படும் கேள்விகள்”** அறிவிப்பை கவனமாக படிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தேதி: **05.03.2020**

உறுப்பினர், தநாவசீபதேகு